2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 303 முதல் 343 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Corporation Water Works

* 344 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether it is a fact that the residents of Kilpauk, Madras, are frequently subjected to a serious nuisance from the smoke emitted by the Corporation Water Works?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம். ..

திரு. கே. விநாயகம் : கீழ்ப்பாக்கத்திலுள்ள கார்ப்பொரேஷன் வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன் காலையிலிருந்து மாலைவரை வேலை செய்கிறது. அது இரவிலேயும் வேலை செய்கிற காரணத்தாலும் அதிலிருந்து வெளிவருகிற புகை அந்தப் பக்கத்திலே இருக்கிற மக்களுடைய வீடுகளிலே அடர்ந்து வந்து அதனால் அவர்களுடைய சாப்பாடுகூட கெட்டுவிடுகிறது என்று அமைச்சர் அவர்களுக்கும், கார்பொரேஷனுக்கும் மகஜர் வந்துள்ளதா? Is it not injurious to the public health of the local people? அப்படியென்றால் இதை நிவர்த்தி செய்வதற்கு என்ன முயற்சி செய்தார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தப் புகை வந்து உணவில் கலந்து கெட்டுவிடுவதாக எந்தவிதமான புகாரும் வந்ததாகக் குறிப்பில் இல்லை. 55 ஆண்டுகளாக அப்படித்தான் இருக்கிறது. 150 அடி உயரத்தில சிமினி கட்டப்பட்டிருக்கிறது. அதன் மூலமாகத்தான் புகை வெளியில் போகிறது. அது உயரத்தில் செல்வதனால் அந்தப் புகையினால் பாதகம் ஏற்படாது. இவ்வளவு காலமாக இயந்திரம் வழியாக புகை வெளிவந்துகொண்டிருக்கிறது. இனி மின்சாரம் மூலமாக புகை வெளிப்படுத்தப்படும். அதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. விரைவிலே வேலைகள் முடியும். இந்தப் புகையினால் எந்தவித பாதகமும் ஏற்படாதபடி செய்யப்படும்.

திரு. எம். எஸ். மணி : இதுபற்றி மாநகர சுகாதார அதிகாரியிடம் அரசாங்கம் விவரம் கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி அவரிடத்தில் கேட்டிருப்பதாகத் தகவல் எனனிடத்தில் இல்லை.

திரு. கே. விநாயகம் : இப்படி கேள்விகள் நாங்கள் கொடுக்கும்போது சம்பந்தப்பட்ட இலாக்கா கார்ப்பொரேஷன் அதிகாரிகளைக் கேட்டு பதில் சொல்லப்படுகிறதா ? அல்லது கேட்காமலேயே பதில் சொல்லப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சம்பந்தப்பட்ட இலாக்காவிலிருந்து பதில் வந்த பிறகுதான் தரபபடுகிறது. இரண்டும் கமிஷனரைக் கேட்டுத்தான் தரப்படுகிறது. புகார் வந்ததா என்று கேட்டதற்கு கிடையாது என்று சொன்னேன்.